மார்ச் - 2010

திருவள்ளுவர் ஆண்டு 2040

செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 5

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

வள்ளல் அவர்களின் 144வது பிறந்தநாள் விழா

மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் 144வது பிறந்த நாள் விழா 21-03-2010 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9-00 மணியளவில் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. இரா. அழகுமலை அவர்கள் தலைமையில், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அவ்விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு. க. முத்தையா பசும்பொன், திரு. ஜெ.போ. ராஜ்குமார், முதல்வர் திரு. க. சின்னப்பா, பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பாண்டித்துரைத் தேவரின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54 திங்கள் இதழ்

பகுதி : 5 திருவள்ளுவர் ஆண்டு 2040

மார்ச் 2010

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

தலைவன் வரைவிடை வைத்து பிரிந்த காலத்தில் தலைவி — முனைவர். ம. பெரியசாமி — 4

பரிபாடல் தரும் பைந்தமிழ் கலைச்சொற்கள் — முனைவர் மெ. மெய்யப்பன் — 13

உணவுப் பாதுகாப்பை நோக்கி.... — 19

அகரச்சுவடி — முடிகை சுந்தரேச சிவம் — 21

திருக்குறள் வரலாறு — மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார் — 24

திருக்குறளில் இரண்டு சொற்கள் — ஆறுவிரல் ஐம்பொறி — 33

செழுமை வாய்ந்த செம்மொழி — ஜெ. பிரதாபன் — 35

திருவள்ளுவர் கொள்ளும் நட்பு — திருமதி. இராசம் மரகதம் — 36

நற்றிணையில் சில நல்லவை — த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்பில். — 38

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

பழந்தமிழ் இலக்கியத்தின் வலிமையைக் காட்டுவதாக இம்மாத இதழ் அமையப் பெற்றுள்ளது.

தொன்மை இலக்கியமாம் சங்க இலக்கியப் பண்பாட்டுக் கூறாகிய வரைவிடைவைத்துப் பொருள் வயின் தலைவன் பிரியும் காலத்தில் தலைவியரின் நிலையை முனைவர் ம. பெரியசாமி கட்டுரையில் புலப்படுத்தியுள்ளார்.

இன்றைய அறிவியல் வளர்ச்சிக்ற்ேற தமிழ்க் கலைச் சொற்கள் சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் தன்மையை 'பரிபாடல் தரும் பைந்தமிழ்க் கலைச் சொற்கள்' என்னும் கட்டுரை சிறப்புற எடுத்துக்காட்டுகிறது.

திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் குறித்த மயக்குறு தகவல்களைக் களையும் விதத்தில் 'திருக்குறள் வரலாறு' என்னும் கட்டுரை அமைந்துள்ளது. திருக்குறளில் அமைந்துள்ள களை கட்டல், கசடற என்னும் இரு சொற்களின் பொருள் வளத்தை மிக நுட்பமாக திரு. ஆறுவிரல் ஐம்பொறி ஆராய்ந்துள்ளமை பாராட்டத்தக்கது. அதுபோலவே திருவள்ளுவர் காட்டும் நட்பின் மேன்மையை, 'திருவள்ளுவர் கொள்ளும் நட்பு' என்ற பொருளில் ஆராய்ந்துள்ளமை சிறப்புடைத்து.

நற்றிணைப் பாடல்கள் நல்ல திணை பாடல்கள் என்று போற்றத்தக்க வகையில் அமையும் பாங்கினை 'நற்றிணையில் சில நல்லவை' என்ற பொருளில் ஆய்வாளர் த. செந்தமிழ்ச் செல்வன் விளக்கியுள்ளார்.

அகரச்சுவடி, செழுமை வாய்ந்த செம்மொழி என்னும் இரு கவிதைகளும் இதழை அழகுபடுத்தியுள்ளன.

தமிழ் ஒரு செம்மொழி என்பதை வலுவூட்டும் விதமாக இம்மாதச் செந்தமிழ் நம் அனைவரின் கைகளிலும் தவழ்கிறது.

இனி நீங்களும் இதழும்....

முனைவர் க. சின்னப்பா

தலைவன் வரைவிடை வைத்து பிரிந்த காலத்தில் தலைவி

முனைவர் ம. பெரியசாமி

'திணை' இலக்கியம் நில அடிப்படை உடையது. நிலம், பொழுது, இயற்கை ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வை இயைபுபடப் புனைவதே திணை இலக்கியமாகும். நிலச்சாயலும், அதில் வாழும் உயிரினச் சாயலும், மனித வாழ்வுச் சாயலும் படிந்து கிடப்பதே திணை இலக்கியம் என்பார் தமிழண்ணல், (சங்க இலக்கிய ஒப்பீடு, ப.37). நிலம் என்பது மொழி வழியாக ஒரு சமூகத்தின் பொது நினைவிற்குள் வரையறுக்கப்பட்டு, அந்நிலத்தை அகத்திணைக்குள் அடக்கிக் காட்டலாம். திணைசார்ந்த நிலத்தைத் தொல்காப்பியர்,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை"

என்னும் நூற்பாவில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்று ஐந்து வகை நிலத்தையும் குறிப்பிட்டு, அந்நிலத்தில் வாழுகின்ற மக்கள் இன்பம், பொருள், அறம் என்ற நிலையில் வாழ்க்கை வாழ்தலைக் குறிப்பிடுகிறார். சங்ககால அகத்திணை வாழ்க்கை முறையில் 'களவு' வாழக்கைதான் சிறப்புடையது எனக் கருதப்படுகிறது. 'களவு' வாழ்க்கை மறையிற்கோடல் உத்தியில் அமைந்துள்ளது. அகத்திணை வாழ்க்கை இரு கைகோளாகப் பிரிக்கப்படும். அவை களவு, கற்பு எனப்படும். அதில் 'களவு' என்பது இழிவானது அல்ல என்பதை இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் "இதனைக் கற்க வீடுபேறு பயக்கும்" (இறையனார் அகப்பொருள், ப.9) எனக் குறிப்பிடுகிறார்.

அக வாழ்க்கையில் ஈடுபடும் தலைவன், தலைவி பற்றிய குறிப்பினைக் கூறும் போது,

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். " வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என்னும் குறிப்பு நெடுநல் வாடையில் வருவதால் தலைவியின் காதலன் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் என்பதால் பத்துப்பாட்டில் உள்ள நெடுநல்வாடை அகமும் புறமும் கலந்த பாடல் என்று அறிஞர் பெருமக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களில் சுட்டி ஒருவர் பெயர் சொல்லக்கூடாது என்பது இதன் வழி புலனாகின்றது.

வரைவு வகை :

'வரைவு' என்பது திருமணம். தொல்காப்பியம் ஆணும், பெண்ணும் மனம் விரும்பி காதல் (களவு) செய்து திருமணம் (கற்பு) செய்யும் வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் குறிப்பிடுகிறது. உலகத்தில் தொன்மையான மொழியாகிய கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளும், பிற்காலத்தில் வந்த மொழிகளும் எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்கு மட்டும்தான் இலக்கணம் கூறுகின்றன. ஆனால் தொல்காப்பியம் மட்டும்தான் 'குடும்ப' வாழ்க்கைக்கு இலக்கணம் கூறுகிறது. இதனால் கி.மு.க்கு முன்பே தமிழர்கள் வாழ்க்கையிலும், மொழியிலும் ஒழுக்கமான நெறியைப் பின்பற்றினார்கள் என்பதை அறியமுடிகிறது.

"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
(தொல். கற்பு.1088)

என்று பெற்றோரால் பார்த்து திருமணம் செய்து வைத்தல் ஒருமுறை.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந் துடன்போகிய காலையான" (தொல். கற்பு.1089)

பெரியவர் மணம் செய்து கொடுக்காமல் தலைவனும் தலைவியும் மனம் ஒருமித்து வாழ்கின்ற திருமணமுறையும் உண்டு. இந்தத் திருமண முறையைத் தான் நக்கீரர் 'வீடுபேறு பயக்கும்' என்கிறார். இதன் வழியாக வரும் வாழ்க்கை முறைக்குத்தான் தொல்காப்பியம், இறையனார்க்களவியல், தமிழ்நெறி விளக்கம், நம்பி அகப்பொருள், மாறனகப் பொருள் போன்ற இலக்கண நூல்கள் இலக்கணம்

தருகின்றன என்பதையும் நோக்க வேண்டியுள்ளது. ஆகையால் 'வரைவு', 'கரணம்' என்பன 'திருமணம்' என்பதைக் குறிக்கின்றன. களவு நிகழ்வின் வழி நடக்கும் திருமணத்தில் தலைவன் தலைவியைத் திருமணம் முடிக்க எண்ணி வரைவிடை வைத்துப் பொருள் தேடச் செல்வான். அச்சூழலில் தலைவியின் நிலையை எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை ஆராய்கிறது.

வரைவிடை வைத்தல் :

தலைவன் திருமணத்துக்காகப் பொருள் தேடச் செல்வான். அப்போது தலைவி வருந்துவதை,

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்" (தொல்.களவு.22) என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அகவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் அகத்திணை மாந்தர்களில் தலைவியின் 'மனநிலை'யைக் குறிப்பால் உணரலாம். அவ்வாறு உணரும் கருவியாகத் தொல்காப்பியர்,

"ஒப்பும், உருவும், வெறுப்பும் என்றா
கற்பும், ஏரும், எழிலும் என்றா
சாயலும், நாணும், மடனும் என்றா,
நோயும், வேட்கையும், நுகர்வும் என்றாங்கு
ஆவியின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டலாகாப் பொருள் என்ப" (தொல்.பொருள்.1193)

என்னும் நூற்பாவில் ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு,பொலிவு, அழகு, சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்தல் போன்ற சொற்களின் பொருள்களை உணர முடியுமே தவிர, பருப்பொருள் போன்று காட்டமுடியாது என்பதை அகத்திணை மாந்தருக்குக் குறிப்பிட்டாலும், இக்கருத்து தலைவியின் மனநிலைக்குப் பொருத்துவதாகவே அமைகின்றது.

தலைவனின் வினை :

'வினையே ஆடவருக்கு உயிரே' என்னும் வரிகளுக்கேற்ப தலைவன் திருமணத்திற்கு முன்பே பொருள் தேடச் செல்லும் நிலையை

உணர்த்துகிறது. அவ்வாறு செல்பவன் காலம் தாழ்த்தும்போது தலைவி ஆற்றாநிலைக்கு உட்படுகிறாள். தலைவன் பொருள் தேடச் செல்வதை மாமூலனார்,

> *"சிலநாள் ஆன்றனையாக, என பலநாள்*
> *உயைவுஇல் உள்ளமொடு வினைவலி உறீஇ"*
>
> (அகநானூறு.325)

எனக் குறிப்பிட்டு, பலநாள் கடந்ததையும் குறிப்பிடுகிறார்.

தலைவி நெஞ்சிற்குக் கூறல்:

'களவு' வாழ்க்கையில் தலைவி தன் நிலையைக் கண், சூழ்நிலை ஆகியவற்றால் உணர்த்துகிறாள். வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் களவு வாழ்க்கையில் நிகழ்வதால் தலைவனைக் கூடாத நிலையில் தனது ஆற்றாமையை,

> *கோடு ஈர் இலங்கு வளை நெகிழ, நாளும்*
> *பாடு இல கலிழும் கண்ணொடு புலம்பி*
> *ஈங்கு இவண் உறைதலும் உய்குவம், ஆங்கே*
> *எழு இனிவாழி, என் நெஞ்சே!* (குறுந் -11)

என்ற மாமூலனாரின் பாடலில் தலைவி தன் நெஞ்சிற்கு, கையில் அணிந்துள்ள வளையல் நெகிழ்வதையும், கண்ணில் நீர் வார்த்தலையும் குறிப்பிடுகிறாள். மற்றொரு பாடல்,

> *"நெஞ்சே நிறை ஒல்லாதே அவரே,*
> *அன்பு இன்மையின், அருள் பொருள் என்னார்*
> *வன்கண் கொண்டு வலித்து வல்லுநரே*
> *அரவுநுங்கு மதியிற்கு இவணோர் போலக்*
> *களையார் ஆயினும், கன் இனிது படீஇயர்*
> *அஞ்சல் என்மகும் இல்லை அந்தில்*
> *அளிதோ தானே நாணே*
> *ஆங்கு அவர் வதிவயின் நீங்கப்படினே"*
>
> (குறுந் -395)

என்னும் பாடல் வரிகள், என்னை நிறுத்தற்கு உரிய நெஞ்சினால், என்னை நிறுத்தற்கு இயலவில்லை. பிரியும் காலத்தில் அன்புடையராகிய

தலைவர், பிரிந்து வதியும் வலிமையுடையராயினார். பாம்பினால் விழுங்கப்பட்ட திங்களைக் காணும் இவ்வூர் மக்களைப் போல, அலரைக் களையார் ஆயினும் இனிதாகக் கண்துயிலுக என்றோ, அஞ்சற்க என்றோ வாயால் கூறுதலும் செய்யவில்லை. இந்நிலையில் யாம் இங்குக் காக்கப்படாமல் அவர் உள்ள இடத்திற்குச் செல்ல உடன்பட்டால் நம்முடன் பிறந்த நாணம் ஒன்றுதான் இரங்கத்தக்கது என்று தலைவி தன் நெஞ்சோடு புலம்புகிறாள். மற்றொரு இடத்தில் தலைவனின் நீண்டநாள் பிரிவால் தலைவியின் நெஞ்சு உறும் துன்பம் காட்டப்படுகிறது.

எல் வளை நெகிழ்த்தோர்க்கு அல்லல் உறீஇச்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு அசாவா
அருளான் ஆதலின், அழிந்து இவண் வந்து,
தொல் நலன் இழந்த என் பொன் நிறம் நோக்கி,
ஏதிலாட்டி இவள் எனப்
போயின்று கொல்லோ, நோய் தலைமணந்தே.

(நற்றிணை – 56)

என்னும் அடிகள், தோழியே ! என் நெஞ்சு என் தலைவரிடம் சென்று அவர் வினை முடிக்கும் வரை இருந்து அவரொடு வரலாம் என்று இருக்கின்றதோ, அன்றி அவர் அருள் செய்யாமையால் யான் இருக்குமிடம் வந்து என் மேனி பசலையால் அடையாளம் தெரியாமல் இவள் அயலிலாட்டி என்று தீர்மானித்து என்னைத் தேடிச் சென்றதோ தெரியவில்லை என்று தலைவி தன் நெஞ்சைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளன.

வண்டிற்குத் தன்நிலை சொல்லல் :

வரைவிடை வைத்துப் பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவனுக்குத் தன்நிலையை உணர்த்த விரும்பும் தலைவி, தேனுண்ணும் வண்டிற்கும் உணர்த்துவதாக,

தாறு படு பீரம் ஊதி, வேறுபட
நாற்றம் இன்மையின், பசலை ஊதாய்,
சிறுகுறும் பறவைக்கு ஓடி விரைவுடன்
நெஞ்சு நெகிழ் செய்ததன் பயனோ? அன்புஇலர்,
வெம் மலை அருஞ் சுரம் இறந்தோர்க்கு
என் நிலை உரையாய், சென்று அவண்வரவே!

என்னும் பாடலடிகள் வாயிலாகப் பாலை நிலம் கடந்து சென்ற தலைவன் இன்னும் பொருள் தேடி முடித்து திரும்பவில்லை என்பதை வண்டிடம், தேன் உண்டுவிட்டு உன் பெட்டையை விரும்பி நீ விரைவாகப் பறந்து சென்று தலையளி செய்வாய். பாலை நிலம் கடந்து சென்ற என் தலைவனிடத்தில் நீ சொல்லாத காரணத்தால் உன் செயல் விரும்பத்தக்கதாக இல்லை என்று கூறுகிறாள். இயல்பாகத் தேனுண்ணும் வண்டினைக் கண்டு தலைவி தன் நிலையைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் உடல்மெலிவு :

தலைவனைப் பிரிந்த தலைவி உடல்மெலிந்து காணப்படுகிறாள். இந்நிலையில் காதலைப் பிரிந்தவரின் உயிர் உடனே நீங்கும்படி விரைந்து வரும் மாலைப்பொழுதும் இவற்றோடு ஒரு சேர வந்து கூடினால் நான் பலநாள் வாழமாட்டேன் என்பதை,

"கொன்றைஅம் தீம் குழல் மன்றுதோறு இயம்ப
உயிர் செலத் துணைதரும் மாலை
செயிர் தீர் மாரியொடு ஒருங்கு தலைவரினே"

(நற்றிணை -364)

என்று கிடங்கில் காவிப் பெருங் கொற்றனார் குறிப்பிடுகிறார். மேலும்,

"கார் நயந்து எய்தும், முல்லை அவர்
தேர்நயந்து உறையும், என் மாமைக் கவினே"

(ஐங்குறுநூறு - 455)

என்று தலைவனைப் பிரிந்ததால் அழகு கெட்டதையும், மின்னுகின்ற அணிகலன் நெகிழ உடல் மெலிதலையும் குறிப்பிடுகிறார்.

தலைவிக்குப் பசலை நோய் :

தலைவனின் நீண்டநாள் பிரிவினால் தலைவி உடல் மெலிந்து காணப்படுகிறாள். மிகுதியான காதலால் புலம்புவதைத் திருக்குறள்,

"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லது இல்லை வலி" (திருக்குறள் - 1131)

என்று தலைவனுக்கு மட்டும் குறிப்பிட்டிருந்தாலும், தலைவிக்கும் இக்குறள் பொருந்துவதாய் இருக்கின்றது.

"பசலை ஆர்ந்த, நம் குவளை அம் கண்ணே"

(குறுந்தொகை – 13)

"செயலையும் தளிரேய்க்கும் எழில் நலம், அந்நலம்
பயலையால் உணப்பட்டு பண்டைநீரொழிந்தக்கால்"

(கலித்தொகை – 14)

"பசலை மாய்தல் எளிதுமன் தில்ல
சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி
மறுதால் உள்ளத்தர் எனினும்
குறுகு பெரு நசையொடு தூதுவாப் பெறினே"

(அகநானூறு – 333)

"கண்ணும் தோளும் தண்நறுங் கதுப்பும்
பழநலம் இழந்த பசலைபாய" (நற்றிணை – 219)

என்னும் பாடலடிகள் தலைவியின் உடல் வேற்றுமையை உணர்த்துவதாக உள்ளன. இதனை வள்ளுவர்,

"உவக்காண் எம்காதலர் சென்றார் இவக்காண் எம்
மேனி பசப்பு ஊர்வது"
"சாயலும் நாணும் அவர்கொண்டார், கைம்மாறா
நோயும் பசலையும் தந்து" (திருக்குறள் – 1185,1183)

என்று தலைவியின் உடல் நிலை மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தலைவன் வரைவு செய்ய நினைத்து பொருள் தேடச் செல்கிறான். தலைவி அவளது வீட்டில் பிரிவு தாங்காமல் தன்நிலையைப் பிறருக்குத் தெரிவிக்காமல் உடல் மெலிந்து அணிகலன் நெகிழக் காட்சியளிக்கிறாள் என்பதையே இப்பாடல்கள் உணர்த்துகின்றன. சமூகக் கட்டமைப்பில் தலைவிக்கு (அல்லது) குடும்பத்தில் உள்ள தலைமைக் குணப்பெண்ணுக்கு அச்சம், மடம், நாணம் என்னும் கடிவாளம் போடப்பட்டிருப்பதால் தலைவனின் பிரிவால் வாடிய நிலையை வாய்திறந்து பிறருக்குச் சொல்லமாட்டாமல் குறிப்பால் உணர்த்துகிறாள். இதனைத் தொல்காப்பியர்,

"காமத் திணையில் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயினான"

(தொல்.களவு – 1054)

என்னும் நூற்பா வாயிலாகத் தலைவிக்குக் காதல் மிகுந்த போதும் அதனைக் குறிப்பால் மட்டுமே அறியமுடியும் என்பதை உணர்த்தியுள்ளார்.

அலர் எழும் அச்சம் :

'அலர்' என்பது தலைவன் தலைவி காதல் பற்றி ஊரார் தெரிந்து கொள்ளல் ஆகும் என்று இலக்கணம் குறிப்பிட்டாலும் 'தலைவி' உடல் மெலிவதன் மூலமும், வேற்று வரைவின் மூலமும் 'அலர்' வரும் என்று தலைவி புலம்புகிறாள், இதில்,

"புலிப் பொறிக் கொண்ட பூ நாறு குழூஉச் சுவல்
வரி வண்டு ஊதலின் புலி செத்து வெரீஇ
பரியுடை வயங்கு தாள் பந்தின் தாவத்
தாங்கவும் தகைவரை நில்லா ஆங்கண்
மல்லல்அம் சேரி கல்லெனத் தோன்றி
அம்பல் மூதூர் அலர் எழ,
சென்றது அன்றோ, கொண்கண் தேரே"

(நற்றிணை - 272)

தலைவியைப் பார்க்க குதிரையில் வரும் தலைவனின் குதிரை குதித்தலைப் பார்த்து ஊர்மக்கள் அலர் எழுப்புவர் என்று அச்சப்படுதலையும், அதனால் அலர் தூற்றுதலையும்,

"தோளே கொடி கொட்பு ஆனா : கண்ணே
வாள் ஈர் வடியின் வடிவு இழந்தனவே:
நுதலும் பசலை பாயின்று திதலைச்
இல் பொறி அணிந்த பல்காழ் அல்குல்
மணி ஏர் ஐம்பால் மாயோட்கு என்று
வெவ் வாய்ப் பெண்டிர் கவ்வை தூற்ற"

(நற்றிணை -333)

தலைவியின் உடல் மெலிவினைக் கண்டு பிற மகளிர் அலர் தூற்றுவர் என்றும் அச்சப்படுகிறாள்.

தொகுப்புரை :

1. களவு, கற்பு என்ற இரண்டு நிலை வாழ்க்கையில் தலைவன் 'களவு' வாழ்க்கையில் 'வரைவு' மேற்கொள்ள பொருள் வயிற் பிரிதல் நிகழும் என்பதை அறியமுடிகின்றது.

2. பொருள் தேடிச் செல்லும் தலைவன் திரும்பிவர காலம் தாழ்த்தும் போது தலைவி ஆற்றா நிலைமைக்கு உட்படுகிறாள்.

3. களவில் தலைவனைப் பிரிந்த நிலையில், தலைவி தன் நிலையைக் குறிப்பால், உடல் மெலிவால் உணர்த்துவதையும், உடல் மெலிவு கண்டு ஊரார் அலர் செய்வர் என்று அச்சப்படுதலின் மூலம் தலைவனிடம் விரைவாக வரைவு வாழ்க்கையில் கூடவேண்டும் என்பதையும் விளக்குகிறது.

4. களவில் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலில் தலைவன் குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் ஆகிய நான்கு நிலங்களிலும் பிரிந்து செல்லுகிறான். இதன்மூலம் களவில் பொருள் வயிற் பிரிவு மருத நிலத்தில் இல்லை என்பது தெளிவாகிறது.

5. முல்லை நிலத்தில் சில பாடல்களில் மட்டும் தான் களவில் பொருள்வயிற் பிரிவு நிகழ்கிறது என்பதையும் சான்றுகள் வாயிலாக அறிய முடிகிறது.

பரிபாடல் தரும் பைந்தமிழ் கலைச் சொற்கள்

முனைவர். மெ. மெய்யப்பன்
காரைக்குடி

அறிவியல் எழுச்சி சமுதாய வாழ்க்கையை மேம்படுத்த வல்லது என்பதைத் தெரிந்து கொண்ட காலத்திலிருந்து வாழக்கையோடு பின்னிப் பிணைந்துவிட்ட தாய்மொழியையும் அதற்கேற்ப வளர்க்க வேண்டிய நிலை தூண்டப்பட்டது. வளரும் அறிவியலுக்கு ஏற்ப மொழியை வளர்க்கத் தவறியவர்கள், வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமான அறிவியலைப் பிறமொழி வாயிலாகவே கற்றுக் கொள்ளவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளானார்கள். தமிழர்களின் நிலை சற்று மாறுபாடானது. அவர்கள் தங்கள் கல்வியை முழுமையாகத் தமிழ்மொழி வழியாக இல்லாமலும், வேற்று மொழி வழியாக இல்லாமலும் கற்று வருகின்றார்கள். நீண்ட காலம் பிறமொழியில் பெற்ற பயிற்சியைக் கைவிட மறுக்கும் மனம் தாய்மொழியில் கொள்ளவேண்டிய நம்பிக்கையைத் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றது.

அறிவியலை, கற்றுக் கொண்ட எம் மொழியில் வேண்டுமானாலும் அறிந்து கொண்டு பயன் பெறலாம் என்றாலும், தாய் மொழியில் படிப்பதால் கால தாமதம் வெகுவாகத் தவிர்க்கப்படுகின்றது. போட்டியான உலகில் சிறிய அளவிலான காலதாமதம் கூடப் பின்னுக்குத் தள்ளிவிடும். அது மட்டுமன்று, கடிய அறிவியலை ஆழமாக அறிந்து கொள்ளவும், அது பற்றிச் சுயமாகச் சிந்தித்து அறிவியலை வளர்க்கவும் முடியாது போகின்றது.

தமிழ் வழிக் கல்வி பின்தங்கிப் போவதற்குப் பல காரணங்களைக் கல்விச் சிந்தனையாளர்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டியுள்ளனர். உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளுக்குரிய அறிவியல் நூல்கள் போதிய அளவில் தமிழில் இல்லாததால், தொடக்கத்திலிருந்து உயர்கல்வி வரை ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த அறிவியலைத் தமிழ் மொழியில் கற்பதற்கு மாணவர்கள் முன் வருவதில்லை. தமிழறிந்த அறிவியல் அறிஞர்கள் பலரிருந்தும் அறிவியல் தமிழ் நூல்களின் எண்ணிக்கை

பெரிதாக அதிகரிக்கவில்லை. அறிவியல் தமிழ் நூல்கள் அறிஞர்களால் அதிகம் எழுதப்படாததற்கு ஒரு மூலகாரணம் தமிழில் போதிய கலைச் சொற்கள் இல்லையோ என்ற தவறான எண்ணம் அவர்களிடம் மேலோங்கி இருப்பதுதான்.

தமிழ்ச் சான்றோர்கள் மொழியை வளர்த்து, தங்கள் இலக்கியப் படைப்புகள் வழி, எண்ணிலாச் சொற்களைக் கையாண்டு சொற்களின் பல்துறைப் பயன்பாட்டிற்கு அன்றைக்கு வித்திட்டிருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களால் வளர்க்கப்பட்ட மொழிவளம், இன்றைய அறிவியலை மட்டுமல்ல, நாளைய அறிவியலையும் கூட விவரிக்கக் கூடியது. அந்த நாளைய அறிவியலையும் கூட விவரிக்கக் கூடியது. அந்த அளவிற்குத் தமிழ் மொழியில் சொற்கள் செறிந்திருக்கின்றன. இன்றைக்கு, சங்க காலச் சொற்கள் மக்களின் இயல்பான வழக்காற்றில் இல்லாததால், தமிழறிஞர்களைத் தவிர்த்த பெரும்பாலானோர்க்கு அவற்றின் பயன்பாடு தெரிவதில்லை.

தாய்வழி தெரிந்து கொண்ட சொற்களோடு ஒருவர் படிப்பறிவால் கற்றுக் கொண்ட சொற்களையும் கூட்டிச் சேர்த்தாலும் மொழியில் உள்ள மொத்தச் சொற்களில் அது பத்து விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும். நமக்குத் தெரிந்த தமிழ்ச் சொற்களுக்குள் கற்பிக்க வேண்டிய மற்றும் கற்க வேண்டிய அறிவியலும் இருக்க வேண்டும் என்று நினைப்பதால், அறிவியல்தமிழ் இன்னும் தொடக்க நிலையிலேயே இருக்கின்றது. தமிழால் உயர் அறிவியலை முழுமையாக விவரிக்க இயலாது என்ற கருத்தே பலருடைய எண்ணங்களில் மேலோங்கி இருப்பதை இது புலப்படுத்திக் காட்டுகின்றது.

கலைச் சொற்களின் தோற்றத் தட்டுப்பாட்டைச், சொல்வளமிக்க சங்க இலக்கியங்களிலுள்ள சொற்களைப் புத்தாக்கம் செய்து நீக்கலாம். கலைச் சொற்களைப் பரவலாக்கம் செய்யாவிட்டால், தோற்றத் தட்டுப்பாட்டை முற்றுமாக அகற்றிவிட முடியாது. எனவே இன்றைய கால கட்டத்தில் பழந்தமிழ்ச் சொற்களைப் புத்தாக்கம் செய்து பரவலாக்கம் செய்யவேண்டியது மொழிஆர்வலர்களின் இன்றியமையாக் கடமையாகும்.

'மம்' என்ற விகுதியுடன் பல சொற்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. பேச்சு வழக்கிலும் அத்தகைய சொற்களில் சில

பயன்படுத்தப்படுகின்றன. வன்மம், சாமம், காமம், நாமம், உரிமம் போன்ற தமிழ்ச் சொற்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். காவல், பாதுகாப்பு என்ற பொருளுடைய 'ஏமம்' என்ற சொல்லும் இத்தகையதே. பரிபாடலில் பலவிடங்களில் இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. பரி.3 வரி26, பரி.4 வரி 53, பரி.7 வரி 40ல் 'ஏமம்' என்ற சொல் எழுந்துள்ளது. பிற தமிழ் இலக்கியங்களிலும் இச் சொல் காணப்படுகின்றது. பொருளதிகாரத்தில் மூன்று குறள்களில் (738,766,815) இச்சொல் கையாளப்பட்டுள்ளது. இது பல கிளைச் சொற்களையும் தந்துள்ளது. அவையும் குறளில் இடம் பெற்றுள்ளன. ஏமாப்பு (குறள் 112,126,398,458,459,868), எமரா (குறள் 448) போன்ற கிளைச் சொற்களையும், ஏமப் புணை (குறள் 1164), ஏமஞ்சாரா (குறள் 815) போன்ற கூட்டுச் சொற்களையும் இங்கு குறிப்பிடலாம். பரி.10, வரி39ல் ஏம் உறு என்றொரு சொல் காணப்படுகின்றது. இவையாவும் அறிவியல் கலைச் சொற்களின் விரிவாக்கத்திற்கு அனுகூலமாயிருக்கின்றன.

வேதியியல் மற்றும் இயற்பியல் துறையில் ஒரு குறிப்பிட்ட பொதுப் பண்புடைய பொருட்களை ஒரு குறிப்பிட்ட சொல்லால் குறிப்பிடுவது மரபு. திண் என்றால் வலிமை. அதனால் எளிதில் உருக்குலையாத, வலிமைமிக்க உறுதியான பொருளைத் திண்மம் (Solid) என்றனர். திண்மம் என்பது பொருளின் ஒரு நிலை. பொருளின் பிற நிலைகளுக்கான கலைச்சொற்களையும் இதை ஒட்டியே உருவாக்கினர். நீர்த்த உருகிய பொருளை நீர்மம் (liquid) என்றும், ஆவியாகிய உறுதியும் உருவமும் இல்லாத பொருளை வளிமம் (gas) என்றும் குறிப்பிட்டனர். இதன் அடிப்படையில் 'ஏமம்' என்ற சொல்லை "insulation' என்ற சொல்லுக்குரிய கலைச் சொல்லாக்கிக் கொள்ளலாம். இது சில கூட்டுச் சொற்களுக்கும் இணக்கமாக இருக்கின்றது.

electric insulation - மின்னேமம்
thermal insulation - வெப்பேமம்
magnetic shield - *காந்த ஏமம்/தடுப்பு*
radiation shield - கதிரேமம்

'மம்' விகுதியைப் பெயரடையிலோ, வினையடையிலோ சேர்த்துப் பெயர்ச் சொற்களை உருவாக்குதல் கொள்கை வழிமுறையில் பின்பற்றி பல புதிய கலைச் சொற்களை எளிதாக உருவாக்கலாம். அப்படி உருவாக்கப்பட்டு

பயனிலுள்ள சொற்களோடு சில புதிய சொற்களும் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.

carbon	-	கரிமம் (கார்பன்)
colloid	-	கூழ்மம் (இடை மிதவலான துகள்)
compound	-	சேர்மம் (கூட்டுப் பொருள்)
condensed matter	-	உறைமம் (உறை பொருள்)
element	-	தனிமம்
emulsien	-	பால்மம்
enzyme	-	நொதிமம்
exciton	-	கிளர்மம்
fluid	-	பாய்மம்
fuel	-	எரிமம் (எரிபொருள்)
gel	-	களிமம்
iso bar	-	சம அணு நிறைமம்
iso tape	-	சம அணு எண்மம்
ore	-	கனிமம்
plasma	-	மின்மம்
plastic	-	நெகிழ்மம்
phosphor	-	ஒளிர்மம்
polymer	-	பல்மம்

பரிபாடலில் சுனாமிக்கு ஈடான சொல் ஒன்று காணப்படுகின்றது. தொலைநோக்கிகள் கண்டுபிடிக்கப்படாத காலத்திலேயே தமிழ்ப்புலவர்கள் பேரண்டத்தின் தோற்றத்தைப் பற்றியும், அதன் அழிவைப் பற்றியும் தெரிவித்துள்ளனர். துகள், காற்று, தீ, நீர், நிலம் தோன்றியதை ஓங்குபரிபாடல் உலகின் ஐந்து ஊழிக் காலங்களாக வர்ணிக்கின்றது. இன்றைக்கு விண் இயற்பியல் அறிஞர்களால் ஆய்ந்துரைக்கப்பட்ட மீ வெடிப்புக் கொள்கை கருத்தும் (Big Bang theory) சற்றேறக்குறைய இதற்கு ஒப்பானதே.

உலகம் அழியப்போவதை இரண்டாவது பரிபாடலின் முதல் நான்கு வரிகள் தெரிவிக்கின்றன. முதலில் நிலப்பகுதிகள் கடல் நீரால் மூழ்கடிக்கப்படுமாம். இந்தியப் பெருங்கடலிலுள்ள மாலத்தீவு கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கி வருகின்றது என்றும், வளிமண்டலத்தில் கார்பன்–டை–ஆக்ஸைடு என்ற வளிமம் பெருகி வருவதால், உலகின் சராசரி வெப்பநிலை

அதிகரித்து, உறைந்த பனி மலைகள் உருகி வருவதால், கடலின் நீர்மட்டம் உயர்ந்து பனி மலைகள் உருகி வருவதால், கடலின் நீர் மட்டம் உயர்ந்து மேலும் சில தாழ்வான நிலப்பகுதிகள் மூழ்கடிக்கப்படலாம் என்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். மாலத்தீவு இன்றைக்கு மூழ்கி வருவதைப் பார்க்கும்போது,பழந்தமிழ்ப்புலவர்களின் தீர்க்கமான அறிவியல் கண்ணோட்டத்தை அறிய முடிகின்றது.

நீர் தீயினுள் ஒடுங்கும் என்ற அடி தீயின் வெப்பம் அதிகரிக்க நீர் ஆவியாகி வெளியேறும் என்ற அறிவியல் கருத்தையும், தீ காற்றில் ஒடுங்கும் என்ற அடி தீயின் வெப்ப ஆற்றலைக் காற்றிலுள்ள துகள்கள் பங்கிட்டுக் கொண்டு எங்கும் பரவிச் செல்லும் என்ற அறிவியல் உண்மையையும், காற்று வானத்தில் ஒடுங்கும் என்ற அடி ஈர்ப்பிலா வெளியில் காற்று தன் தொடக்க இயக்க வேகத்துடன் எங்கும் விரவிச் செல்லும் என்ற அறிவியல் செய்தியையும் கூறுவதாக இருக்கின்றது. இது இன்றைய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப இருப்பதுடன் தமிழ்ப் புலவர்களின் அறிவியல் அறிவிற்கும் சான்று பகருகின்றது. பரிபாடலின் மூன்றாவது பாடலில் 92வது வரியில் அச்சம் தரும் ஊழிப் பெருவெள்ளத்தைக் குறிப்பிட நாமவெள்ளம் என்றொரு சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை சுனாமிக்கு இணையான சொல்லாக எடுத்துக் கொள்ளலாம்.

பரிபாடல் 4 வரி 60ல் அடுக்கிய இதழ் என்ற பொருள் தருமாறு 'நிரையிதழ்' என்றொரு கூட்டுச் சொல் இடம்பெற்றுள்ளது. படிகவியலில் "lattice' என்ற சொல் அணித்தளம் என்று மொழியாக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 'மம்' விகுதிச் சேர்க்கையின் அடிப்படையில் இதை அணிமம் என்று சொல்லாக்கம் செய்யலாம். Space lattice என்ற துணைச்சொல்லை நிரையணிமம் என்று சொல்லாக்கம் செய்ய இது அனுகூலமாயிருக்கிறது

பரிபாடல் 5 வரி 1ல் பரந்த என்ற பொருளில் பாய் என்ற சொல் வந்துள்ளது. இயற்பியலில் space என்பதற்குப் பரந்தவெளியை விளக்கச் சொல்லாகவும், பாய்வெளியைக் கலைச்சொல்லாகவும் கொள்ளலாம் என்பதற்கு இது வழிகாட்டுகின்றது.

காந்தவியலில் magnetic domain என்ற சொல்லுக்குக் காந்தவியல், காந்தப் பண்ணை, காந்தத் திட்டு என்று பலவாறாகச் சொல்லாக்கம் செய்யப்பட்டிருந்தாலும் 6வது பரிபாடல் 48வது வரி தரும் நிறைவான சொல் காந்தமண்டியாகும். மண்டி என்றால் மிகுதியாகத் திரண்டிருக்குமிடம். வழக்காற்றில் தேங்காய் மண்டி, புளி மண்டி, வாழை

மண்டி என்று சொல்வதிலிருந்து இதை உணரலாம். காந்த மூலங்கள் திரண்டிருக்கும் ஒரு பகுதியைக் காந்த மண்டி என்று அழைப்பது சாலப்பொருத்தமே.

பரிபாடல் 6 வரி 83ல் கசிந்தொழுகுதல் என்ற பொருளில் மலிர்தல் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதை "tunnelling' என்ற சொல்லுக்கு இணையாகக் கொள்ளலாம். பீச்சாங்குழல் என்ற கூட்டுச் சொல்லுக்கு 'சுருங்கை' என்ற கலைச்சொல்லைப் பரிபாடல் (பரி 16, வரி 20) தந்துள்ளது. Acceleration என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பரிபாடல் 14 வரி 16இல் இடம்பெற்றுள்ள 'கதழ்' என்ற சொல்லை மாற்றமேதுமின்றிப் பயன்படுத்தலாம். விரைந்து பரவும் தீயை, 'கதழெரி' என்று மக்கள் கூறுவதிலிருந்து இதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இச்சொல் பல துணைச் சொல்லாக்கங்களுக்கு அனுகூலமாயிருக்கின்றது.

accelerator - கதழி/முடுக்கி
accelerated motion - கதழியக்கம்/முடுக்கப்பட்ட இயக்கம்
linear accelerator - நேர் கதழி / நேர் கோட்டு முடுக்கி
angular acceleration - கோட்டக் கதழ்/கோண முடுக்கம்

பரிபாடல் 2 வரி 30ல் நிலவின் களங்கத்தைக் குறிப்பிட மதி மறு என்ற கூட்டுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. crystal imperfection என்ற சொற்றொடரை 'படிக்குறைபாடு' என்று மொழியாக்கம் செய்திருந்தாலும் படிக மறு/படிக வழு என்று சுருக்கமாகக் குறிப்பிடுவது சிறப்பாக உள்ளது. இது,

lattice defect - அணிம மறு/வழு
point defect - புள்ளி மறு/ வழு
line defect - வரி மறு/வழு
surface defect - தள மறு/வழு

போன்ற துணைச் சொற்களையும் உருவாக்கியுள்ளது.

சங்க இலக்கியங்களை அலசினால் ஒருவர் ஆயிரக்கணக்கான கலைச் சொற்களைப் புத்தாக்கம் செய்து உருவாக்க முடியும். கலைச் சொற்களுக்காக நாம் மரபு வழிச் சொற்களை மறந்து விட்டுத் தேடும் முயற்சி, கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதையைத்தான் நினைவூட்டுகின்றது.

உணவுப் பாதுகாப்பை நோக்கி

மழை பற்றாக்குறை

இன்று நாடு ஒரு நெருக்கடியான நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. பருவ மழை பொய்த்து விட்டது. பல இடங்களில் பெய்த மழையும் போதவில்லை. இருப்பினும் சில இடங்களில் இயல்பான அளவும், வேறு சில இடங்களில் மிகுதியாகவும் மழை பொழிந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் வேளாண்மைப் பணிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் சொல்லொணாத் தொல்லைகள், துன்பங்கள் விளைந்துள்ளன. நெல் விளைவிக்கப்பட்ட ஆறு மில்லியன் எக்டேர் நிலப்பரப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உணவு தானியங்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளன

கடந்த 2007-08, 2008-09 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட, கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்கள் தற்போது நமக்குக் கைகொடுத்து உதவுகின்றன.

குறைந்த அளவு ஆதரவு விலையைக் கணிசமாக உயர்த்தி வேறுபல கொள்கைகளையும் வகுத்து செயல்பட்டமையால் இந்நிலை வாய்த்தது. இவ்வாறு, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய அளவுக்குத் தட்டுபாடின்றி உணவு தானியங்கள் கிடைப்பதை உறுதி செய்திடும் நிலையில் நாம் இருக்கின்றோம். தேவை ஏற்பட்டால் அங்காடி (சந்தை) நடவடிக்கைகளில் தலையிட்டு தேவையான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நாம் தயங்கக் கூடாது.

குறிப்பிட்ட பகுதிக்கான அணுகுமுறை:

நம்முடைய கூட்டு முயற்சிகள் - குறிப்பிட்ட பகுதிகளுக்கான அணுகுமுறையை, செயல்திட்டத்தை உருவாக்குவனவாக இருக்க வேண்டும். போதிய அளவுக்கு மழை பொழிந்த பகுதிகளில் தொன்றுதொட்டு பயிரிடப்படும் பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்திட வேண்டும். மழை குறைவாகப் பெய்தமையால் நெல் பயிரிட முடியாத பகுதிகளில் மற்ற பயிர்களைப் பயிரிடுவது பற்றி நாம் சிந்திக்க

வேண்டும். நம்முடைய செயல்திட்டத்தின் / அணுகுமுறையின் இன்னொரு பகுதி தற்போது விளைந்து கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்றுவதாகும். நாட்டின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தி நோக்கில், போதிய அளவு மழையின்மையால் விளைந்த பாதிப்புகளைத் தணிப்பதற்கு இம்முயற்சி நமக்கு உதவிடும்.

மழை குறைவான அல்லது நீண்டகாலம் வறண்டு கிடந்த பகுதிகளில் மாற்றுப் பயிர் திட்டங்களை அனைத்து மாநிலங்களும் செயல்படுத்துமென உறுதியாக நம்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கூடுதல் டீசலும் மின்சாரமும்:

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநில அரசு வழங்கிடும் டீசல் மானியத்தில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதென அண்மையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய தொகுப்பிலிருந்து சில மாநிலங்களுக்கு மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுக்கும் இந்தச் சலுகையை நீடிக்குமாறு மின்சாரத்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு கூடுதலாக வழங்கப்படும் மின்சாரத்தை வேளாண்மைப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

கிடைத்திடும் நிதிகளைப் பயன்படுத்திக் கொள்க:

இரண்டாண்டுகளுக்கு முன்பு, தேசிய விவசாயிகள் முன்னேற்றத்திட்டம் (இராஷ்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா, தேசிய உணவுப் பாதுகாப்புத்திட்டம் ஆகிய இரண்டு முக்கியமான திட்டங்களை அறிவித்தோம். இவ்விரு திட்டங்களுக்காக ஒதுக்கப் பெற்ற நிதி, பல மாநிலங்களில் முழுமையாகப் பயன்படுத்தப் படாமல் இருப்பது மிகவும் கவலையளிக்கக் கூடிய செய்தியாகும்.

நீங்கள் அனைவரும் ஊர் திரும்பியதும் இந்த நிலையைத் தயவு செய்து மறு ஆய்வு செய்திட வேண்டுமென்றும், அலுவலக நடைமுறைகள், தடைகள் காரணமாக விவசாயிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப் படாமல் இருந்துவிடக் கூடாதென்பதை உறுதி செய்திட வேண்டுமென்றும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

08-08-09 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு பிரதமர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி.

அகரச்சுவடி

முடிகை சுந்தரேச சிவம்
கோவை

அகரம் போலப் பரம்பொருள் முதலே !
ஆதவன் போலவன் அனைவர்க்கும் பொதுவே !
இரத்தல் என்றும் இழிதொழில் தாமே !
ஈதலின் பயனும் இரப்பவர் இயல்பே !
உயர்ந்தோர் என்பது உள்ளத்து உயர்வே !
ஊழலும் லஞ்சமும் உறுதுணை ஆகா !
எத்திசைக்கு ஏகினும் ஈன்றமண் மறவேல் !
ஏற்றமும் தாழ்வும் நிலையில வாகும் !
ஐயந் தெளிந்து ஆற்றுக வினையே !
ஒழுக்கமொடு கல்வி உயர்வினை நல்கும் !
ஓவியப் பாவை வேலையைக் கெடுக்கும் !
ஔடதம் மிகுந்தால் ஆருயிர்க்கு ஆகா !
ஃகெனத் தனிக்க நிற்கதி தானே !
கடமையை ஆற்றக் கையூட்டு எதற்கு !
காலம் கடந்த நீதியும் அநீதியே !
கிளந்தவை எண்ணி நடந்திடற் கடனே !
கீர்த்தியும் செல்வமும் உழைப்பினுக்கு ஊதியம் !
குளமும் கழனியும் குறைபடாது ஓம்பு !
கூழ்ப்பறக் கற்று மேற்பட வாழ்வோம் !
கெடுப்பேன் என்னல் கெடுவதற்கு அடித்தலம் !
கேள்வியும் நுகர்ச்சியும் மேன்மைக்கு ஆறு !
கைக்கோளில்லா காரியம் பாழாம் !
கொடையும் குணமும் கடைவழிக்கு ஏகும் !
கோகிளம் ஆள்வோர் கோவினும் மிக்கார் !
கௌடம் பேசும் சௌகமும் நஞ்சே !
சகனெனப் படுவோன் சங்கயம் கடந்தேன் !
சாதனைச் செய்தி வேதனை மாய்க்கும் !
சிறப்பும் தாழ்வும் பிறப்பினைச் சாரா !
சீதனம் என்பது மாதனம் அன்று !
சுந்தரம் என்றும் நிரந்தர மன்று !
சூதும் வஞ்சமும் ஏதமே நல்கும் !
சென்னீர் தானம் முன்னூழ் மாய்க்கும் !
சேடும் வனப்பும் வாடும் வகைத்து !
"சை"யென ஞாலம் வையாது ஒழுகு !

சொல்லும் செயலும் முரண்படாது ஓம்பு !

சோதனைக்(கு) அஞ்சினால் சாதனை ஏது !

செளடம் காக்கச் சங்கடம் தீரும் !

ஞமனுக்கு வேந்தும் ஞமலியும் ஒன்றே !

ஞானிக்(கு) அழகு நோன்பொடு நேயம் !

ஞமிறென உழைக்க நிமிர்ந்திடும் வாழ்வே !

ஞெமிரிய நெஞ்சம் நிகேதனமாகும் !

நேயம் மிகுந்தார்க்கு நேரலர் அரிதாம் !

தளராது உழைக்கத் தவ்வை அகலும் !

தங்கமும் உராய்ந்தே தரம் வெளிப்படுத்தும் !

தாய்மையும் வெறுக்கும் தீவிரவாதம் !

தாய்மொழிக்(கு) ஈடாய் வேறேதும் இல்லை !

தானெனும் அகந்தை தீங்குழி மாய்க்கும் !

திருமணம் என்பது இருமன இணைப்பே !

தீந்தமிழ் இன்பம் தேனினும் இனிதே !

துன்ப நுகர்ச்சி துணைபல நல்கும் !

தூக்கிச் செய்யின் ஏக்கம் இல்லை !

தெட்டத் தெளிந்து நட்டல் இனிது !

தேசமும் மானமும் நீசருக்(கு) இல்லை !

தையலை நம்பிக் கைப்பொருள் போடு !

தொடக்கம் யாவும் முடிவது இயல்பே !

தோன்றிய தோர்நாள் மறைவதும் இயல்பே !

தௌகிக மாயினும் தனிக்கச் சிறப்பு !

நட்டது முளைக்கும், இட்டது திரும்பும் !

நாவும் புலனும் நயம்பட ஓம்பு !

நானெனும் அகந்தை வீண்பகை வளர்க்கும் !

நிகழ்வது எண்ணி வருவது துணியேல் !

நீர்மையும் குணமும் சேர்த்திடச் சிறப்பு !

நுட்பமும் தெளிவும் கற்றவர்க்(கு) அழகு !

நூனயம் அறிந்து பேணிடச் சிறப்பு !

நெய்தலும் உழவும் பொய்தலில் தொழிலாம் !

நேரலர் மாட்டும் நேயமே காட்டு !

நைமிசரென்பார், நைராசியமும், நேயமும் மிக்கார் !

நொடிப்பொழுது சுணக்கம் சுடிகையை இழக்கும் !

நோய்தரும் உணவு ஆய்ந்தறிந்து விலக்கு !

நௌவென மிதந்து சௌம்யனை நாடு !

பண்பெனப் படுவது (பிறர்மனம்) புண்படாது ஒழுகல் !

பாவலர்க்(கு) அழகு பயனுள சொல்லல் !

பிணியும் பகையும் பிறப்பினில் களைக !

பீரமே குழவியை வீரனென் நாக்கும் !

புண்ணியம் என்பது நன்னயச் சேர்க்கை !

பூங்குயில் நிறக்குறை தேன்குரல் மாய்க்கும் !

பெந்தும் நட்பும் சந்ததம் பேணு !

பேராளர்க்(கு) அணி தாராள குணம் !

பைக்கமும், களவும், லஞ்சமும், ஒன்றே !

பொதுமகள் நேசம் குலமொடு நாசம் !

போதுமென்ற மனம் சாதனைக்(கு) ஆகா(து) !

பௌதிகம் பெருத்தால் வைத்தியற்கு வாழ்வு !

மகன்மை யாவது தகைமையிற் சாலல் !

மாந்தர்க்(கு) அழகு சேர்ந்திணைந்து ஒழுகல் !

மின்திறம் நீரிவை பொன்னெனப் பேணு !

மீட்சியாவது மீசை முயறல் !

முயற்சியாவது தளர்ச்சி யில்லது !

மூப்பும் பிணியும் யாக்கை மாட்டே !

மெத்தனப் போக்கு அத்தனையும் பாழ் !

மென்மையும் பிரிவும் தன்மை யென்றாகும் !

மேழியார் கண்ணே ஆழிசூழ் உலகு !

மைந்தர்க்(கு) அழகு சொந்தம் பேணல் !

மொய்ம்புள காலை ஐம்புலம் பேணு !

மோகம் மிகுந்தால் சோகமே மிஞ்சும் !

மௌனம் யாவும் சம்மதம் ஆகா(து) !

யவனம் மிகுந்தால் கவனம் சிதையும் !

யாண்டும், அகவையும், மீண்டும் வராது !

யுத்தமும் பூசலும் முற்றுமுன் மாற்று !

யூகமுடிவு சோகமே காட்டும் !

யோகம் பயின்று அகம் பேணு !

யௌதகம் பாராது கௌரிகை தேடு !

ரவியும் மதியும், புவிக்கு யிராகும் !

ராசியும் மணியும் காசினைத் தாரா !

ருசிக்கென வன்றிப் பசிக்கிரை தேடு !

ரூபாய்க்(கு) அடிமை என்றாகாது ஒழுகு !

லஞ்சமும் தாயுடல் விலைப்பொருட் கீடே !

லாபம் மிகுந்தால் உலோபி என்றாக்கும் !

வரவுணர்ந்த செலவு தரமறிந்து பழகு !

வசைக்கும் இசைக்கும் அசையாது ஒழுகு !

வாவியும் கழனியும் வாழ்வாதாரம் !

வினவித் தெளிந்து வினைசெய்தல் இனிது !

வீம்புக்(கு) ஆற்றின் விளைவு எதிராகும் !

வெஞ்சமரிடத்தும் தஞ்சரைப் பேணு !

வேதநெறி யாவது பேதமின்றி ஒழுகல் !

வைகறைப் பாடம் கைவச மாகும் !

வௌவிய பொருளால் தௌவையே சூழும் !

திருக்குறள் வரலாறு

மகாவித்துவான்
ரா. இராகவய்யங்கார்

திருவள்ளுவர்

இதுவே இந்நூலாசிரியர் பெயர்கள் அனைத்திலும் பெருவழக்கிற்றாதலானும், சிறுபான்மை ஏனைய பெயர்கள் போலாது இஃது, ஆகு பெயராய் இவரால் இயற்றப்பட்ட நூற்கே சென்று வழங்குஞ் சிறப்பிற்றாதலானும் இதனையே முதற்கண் நிறுத்து விளக்கப் புகுந்தோம். ஆகுபெயராய்க் கொண்டு "வள்ளுவர் தொல்காப்பியரே" எனக் கொற்றங்குடியாரும் "தொல்காப்பியத் திருவள்ளுவர்" என இலக்கணக் கொத்துடையாரும் வழங்கினர்.

இனி, இப்பெயர்ப்பொருள் வருமாறு : திரு என்பது ஈண்டு அறிவுடையாரான் விரும்பப்படுந் தன்மை. "திருவளர் தாமரை" என்புழித் "திரு கண்டாரான் விரும்பப்படுந் தன்மை நோக்கம்" என்பர் பேராசிரியர். (திருச்சிற்றம்பலக்கோவை,1) திருவிசைப்பா என்புழித் திரு என்பது கேட்டாரால் விரும்பப்படுந் தன்மையெனப் பொருள்தருதலான் ஈண்டைக்கேற்ப அறிவுடையார் எனக் கூறப்பட்டது.

வள்ளுவர் என்பது சாதிபற்றிய இயற்பெயர். எங்ஙனஞ் சாதி பற்றியவாறெனிற் கூறுதும்; இவர் கீழ்க்குடிப்பிறந்தார் என்பது "மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலத் துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா-வுய்த்தறியின், மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றாரனைத்திலர் பாடு'' என்னும் முதுமொழிவெண்பாவினால் நன்குணரற்பாற்று. ''தேளைவ மறந்தேயும், வள்ளுவனென்பானோர் பேதையவன் வாய்ச் சொற், கொள்ளா ரறிவுடையார்" (திருவள்ளுவமாலை) என்புழி மக்களிற் சிறந்தான் ஒருவனை வள்ளுவன் என்னுஞ் சாதி பற்றி இழித்தல் அறிவிலாரது இயல்பு எனப் பொருடந்து நிற்றலான், அக்குடி வள்ளுவக்குடி என்பது தெள்ளிது. வள்ளுவராவர் யானை மேல் முரசுகடிப்பிட்டு அரசாணை சாற்றுவர். "ஏமாரு மன்னீரெயிறினுமி னெங்கோமான், வாமான்றேர்க்கோதை சதயநா–ளாமாறு, காம

நுகருமின் கண்படுமி னென்னுமே, யேம முரசின் குரல்". இதனுள் இழிகுலத்தோன் பறை சாற்றினமை கூறுதலின் (தொல்.பொருள். புற.36) என நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றான் முரசறைவார் இழிகுலத்தோராதல் தெளிக. இவ்வாறு ஓர்குடி பண்டு உண்மையினையும், இக்குடிப்பிறந்தோன் வள்ளுவன் எனப்படுதலையும் "முரசுகடிப்பிடுஉ முதுக்குடிப்பிறந்தோன்...... யணிவிழாவறைந்தனன்" என்னும் மணிமேகலை துறவானும், (விழாவறை காதை)

"வானவன் குலத்தெமர் வரத்தி னால்வரும்
வேனில்வே விருந்தவம் மிதிலை நோக்கிநஞ்
சேனையு மரசருஞ் செல்கு முந்தெனா
வானைமேன் மணமுர சறைகென் றேவினான்"

"வாம்பரி விரிதிரைக் கடலை வள்ளுவன்
றேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவ
னாம்புர் சுலகெலா மளந்து கொண்டநாட்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான்"

என வரும் கம்பராமாயணச் செய்யுட்களானும் உணர்ந்துகொள்க. இத்துணையுங் கூறியவாற்றால் வள்ளுவர் என்பது சாதி பற்றிய பெயராதல் தெளிக,

இனி இஃது இயற்பெயர்ாமாறு – "சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் (கிள. 41) சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் "தெய்வப்புலவன் திருவள்ளுவன்" என உதாரணம் எடுத்தோதினமையான் நன்கு உணரப்படும். கீழ்க்குடிப்பிறந்த பெருநூல் செய்தாரை அக்குடிப்பெயரால் வழங்குதல் உலகவழக்காதலான், இவர்க்கும் அக்குடிப்பெயரே வழங்கலாயிற்று, இவ்வாறு குடிப்பெயரே நூலாசிரியர் இயற்பெயராய்க் கொண்டு வழங்குவது வடநூலார்க்கும் உடம்பாடென்பது, அவர், 'வியாதகீதை' என வழங்குமாற்றான் நன்கு தெளிக. வியாதன்–வேடன். இனித் திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடையாரையும் விளக்கி நின்றன என்பாரும் உளர்.

இப்பெயர்வழக்கினைத் திருவள்ளுவமாலையுள்ளும், ஆசிரியர் பரிமேலழகர் உரைப்பாயிரத்துள்ளுங் காண்க. இஃது சிறுபான்மை திருவென்னும் அடைஒழிந்து வள்ளுவர், வள்ளுவன், வள்ளுவனார் எனவும் வழங்கப்படும்.

தேவர்

இப்பெயர், திருத்தக்கத்தேவர், தோலாமொழித்தேவர் என அடை புணர்ந்து வழங்கும் பெயர்கள் போலாது இவர்க்குத் தனிநின்று வழங்கும் சிறப்பிற்றாகலானும், திருத்தக்கத்தேவரைத் தேவர் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் வழங்குவது அவரியற்றிய சிந்தாமணியின் கண்ணன்றி வேறிடத்தின்மையாலும், அவ்வுரையாளரே சிந்தாமணியுள் அந்நூற்சம்பந்தம் பெறாத திருவள்ளுவரைத் தேவரென வழங்குதலானும் (விமலையாரிலம்பகம் 3) இத்திருப்பெயரை அடுத்து நிறுத்து விளக்கப்புகுந்தேம்.

இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்ந்தவருள் ஒருவராதலால், இவரை வானின்கண் உறையுந்தேவருள் ஒருவராக வைத்து அறிவாளர் நன்குமதித்து வழங்கினார் எனக்கொள்க. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" திருக்குறள் 50) என்னுந் திருக்குறளையும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையையும் நோக்குக.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் "கழிவினும் வரைவினும்" (தொல்.பொருள். கற்,12) என்னுஞ் சூத்திரவுரையிற் றலைவன் மனையறங்கண்டு கூறியதற்கு எடுத்தோதிய "அடிசிற்கினியாளை" என்னுஞ் செய்யுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரது என்பது உலகத்துப் பெருவழக்காதலானும், இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பை மேம்படுத்துரைத்தாராகலானும். அகலிகை தோள்விடாக்கௌதமனை ஐந்தவித்தானாகக் கருதினாராகலானும் (திருக்குறன் - 25) இவ்வாசிரியர் இல்லறமே இனிதோம்பிமிக்கார் என்பது தெள்ளிது. இவர் இல்லாளோடு கூடிவாழ்ந்தே புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தனையும் அறுத்தற்கு உடம்பட்டமை "ஐந்தவித் தானாற்றல்" என்னும் நீத்தார் பெருமைத் திருக்குறளால் நன்று விளங்கும்.

இனி, அறிவான் மக்களின்மேம்பட்டுத் தேவரோடொத்தாராகக் கருதித் தேவரென்ப எனினும் அமையும். அறிவு மிகுதி நோக்கித்

தேவரைப் புலவரெனப் பெயரிட்டு வழங்குமாற்றானும் ஈது பொருந்துதல் காண்க. மக்கட் 'தேவரனையர்' என உயர்த்தும் ஆன்றோர் கூறுப. 'விலங்கன்னார் வெள்ளறிவினார்' என நாலடியினும், தேவரனையர் புலவர் என நான்மணியினுங் கூறியவாற்றான் இதன் உண்மை உணர்க. இப்பெயர் வழக்கினைத் திருவள்ளுவ மாலையினுங் காணலாம். மேற்கூறிய பெயரினையும் இப்பெயரினையும் புணர்த்துத் 'திருவள்ளுவதேவர்' எனவும் வழங்குப. (நேமிநாதவிருத்தி, சொல்)

தெய்வப்புலவர்

இவர், வேதம் ஓதாக்கீழ்க்குடிப்பிறந்தும் அதன்கண் நுண்பொருண் முற்றவுணர்ந்து உரைக்கவல்லராதலால், தெய்வத்தான் எய்திய புலமையுடையார் என்பது, இனி, நாமகளும், இறையனாரும் பாயிரம் ஓதினமையாற் றெய்வத்தாற் சிறப்பித்தோதப்பட்ட புலமையினார் எனவும், "தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாதி, யந்தா மறையே லயன்" ''நான்முகத்தோன் றான்வள்ளுவனாகித் தந்துரைத்த" என்பனவற்றால் இருபெயரொட்டாக்கித் தெய்வமாகிய புலவர் எனவும், நீதிநூல் ஓதுதலாற் றெய்வப்புலவனான வியாழனையொத்தார் எனவும் உரைப்பினும் அமையும். இப்பெயர் வழக்கம் 'சிறப்பினாகிய' (தொல், சொல், கிள. 41) என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரையினும், நச்சினார்க்கினியர் உரையினுங் கண்டது.

பொய்யில் புலவர்

இப்பெயர்ப், பொய்ம்மையில்லாத அறிவர் என்னும் பொருட்டு தன்கண் மயக்கமின்மையிற் பொருள்களை உள்ளவாறுணரவும் உணர்ந்தவாறு உரைக்கவும் வல்லரென்பதாம். பிறரும் உள்ளவாறுணர்ந்துரைத்தமை கருதி 'நான்கின்றிறந் தெரிந்து செப்பியதேவை' என்றார். (திருவள்ளுவமாலை) பொய் உணர்வினும் உரையினும் உண்டாதலான் இரு *கூறாக்கி உரைக்கப்பட்டது*. இதற்கு இயைய 'வாலறிவின் வள்ளுவர்' எனவும், 'வாய்மொழி வள்ளுவர்' எனவும் இருபாற் படுத்துரைத்தார் திருவள்ளுவமாலையினும். 'வாலறிவு' என்பது மெய்யுணர்வாதலே வாலறிவன் (திருக்குறள் 2) என்புழிப் பரிமேலழகர் உரைத்தவாற்றாந்தேறுக.

'பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று' (திருக்குறள் 297) பொய்யாமையன்ன புகழில்லை, (திருக்குறள் 296) 'வாய்மைமொழியிற் றவத்தொடு தானஞ்

செய்வாரிற்றலை' (திருக்குறள் 295) எனப் பொய்யாமைச் சிறப்பினைக் துறவறவியலுள் வைத்து வற்புறுத்துரைத்ததின்றி, இறுதியில் 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத் தொன்றும், வாய்மையினல்ல பிற' (திருக்குறள் 30). எனத் தம்மேல் வைத்துத் தாமே கூறிப்போந்தராகலான், இவர் பொய்யாவழக்கினரென்பது தெள்ளிது; எனவே இவ்வியைபு பற்றியும் ஈண்டுப் பொய்யின்மை விசேடமாயதெனக் கொண்டு உணர்வு உரை ஒழுக்கங்களாற் பொய்ம்மையில்லாரெனினும் நன்கு அமையும். பொய் ஒழுக்கத்தினும் உண்டென்பதனைப் 'பொய்தீர்ஒழுக்கம்' (திருக்குறள். 6) என்பதனான் உணர்க. நச்சினார்க்கினியர், புலவுத்துறந்த நோன்பின ரெல்லாம் பொய்கூறார் என்பர்; என்னை? நக்கீரனார் புலவுத்துறந்த நோன்பு டையராகலாற் பொய்கூறார். '(தொல். பொரு. மரபி. 94) எனப் பொய் கூறாமைக்குப் புலவுத்துறந்த நோன்புடைமையினை ஏதுக்கூறினார் ஆகலான்,' ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று (திருக்குறள் 323) என்பதன்கண்ணும் இக்கருத்துப் புலப்படுத்து இவ்விருபேரறமும் இணைந்து நின்றவாறு உய்த்துணர்ந்து கொள்க. இனித் தேவரும் அந்நோன்பு உடையாரென்பது புலான்மறுத்தல் உரைத்தமையான் உணரப்படும். 'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேனிகயரில்' (திருக்குறள். 834) என உரைத்தவாறு ஒழுகாரைப் பெரிதும் இழித்தனராக லான், இவர், மறுத்தவாறு துறந்தாராவர். இதனாலும் இவரது பொய்யா வொழுக்கம் புலன் கொளற்பாற்று. இப்பெயர்வழக்கம் மணிமேகலையிற் கண்டது (சிறை செய்காதை, வரி 61)

முதற்பாவலர்

முதன்மையாகிய பாவலரென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில், 'ஆசிரியம் வஞ்சி வெண்பாக்கலியென, நாலியற் றென்ப பாவகை விரியே '(தொல், பொரு, செய், 115) என்பதனாற் பா இனைத்தென விரித்துரைத்து அதனை அடுத்து அந்நிலைமருங்கி னறமுத லாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப '(116) என்பதனால் அப்பாவினைப் பொருட்கு உரிய வாற்றான் வரையறுத்தோதிய இலக்கணம், பிழைபடாது, பாக்களுள் முதன்மை யெய்திய குறள்வெண்பாட்டான் மும்முதற் பொருளையும் முப்பாலாக வைத்து முறைவகுத்து, முதற்கண் மொழிந்தார் இவரே என்பது கருத்து. பிறரெல்லாம் மும்முதற் பொருளில் ஒன்றேயுரைத்தும், முற்றவுரையாதுவைத்தும், விரவியுரைத்தும் போயினார் என்க. இக்

கருத்துப்பற்றியன்றே சான்றோரும் 'முப்பான்மொழிந்த முதற்பாவலர்' என்றார் திருவள்ளுவமாலையில், தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினால் என்னுஞ் செய்யுளிற் குறள் வெண்பாட்டினை முதற்பாவென்று வழங்கியவாறு காண்க. பாவலருள் முதன்மை எய்தினார் எனினும் அமையும்.

பெருநாவலர்

பெருமையினையுடைய நாவலர் என்பது, நாவலர் - நாவன்மையினையுடையார். நாவன்மையாவது கேட்டார்ப்பிணித்துக் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையுடைமை. 'நாநலமென்னு நலனுடைமை' (திருக்குறள் 641) என்பதனாற் சொல்வன்மையினை நாநலமென்றார் இவரே. இவர் யாரினுஞ் சிறந்த சொல்வன்மையுடையார் என்பது கருதியே நாப்புலமை வள்ளுவனார் எனவும், 'சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்' எனவும் சான்றோர் பாயிரம் பாடியதூஉ மென்க. அன்றியும், 'சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை, யிகல்வெல்லல் யார்க்குமரிது' (திருக்குறள் 647) என்று தாம் மொழிந்ததற்கேற்ப இவர் தமது நாவன்மையாற் சங்கத்தாரை வென்று உயர்ந்தார் என்ப. 'மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந், துய்த்தசங்கத்தார் தாழ்ந்தார் என்றார் பிறரும். (சோமேசர் முதுமொழி வெண்பா)

பெருமையாவது செயல்கரிய செய்தலுடைமை', செயற்கரிய செய்வார் பெரியர்' (திருக்குறள். 26) என்றாராகலான், ஈண்டு வேதப் பொருளை விரகாற்றொகுத்து உலகோர் ஓதத்தமிழால் உரைத்தல் செயற்கரிய செய்தலாம். இக்கருத்தினைப் பெறலரிய நாலு மொழிந்த பெரு நாவலரே; (திருவள்ளுவ மாலை) என்பதனாற் பெறுதற்கரிய நான்கு பொருளையும் பெறுதற்கெளிதாக மொழி செய்த என்று சான்றோர் விசேடித்தவாற்றானும் உணர்க.

மாதாநுபங்கி

இஃது மாதம், அநுபங்கி என இருமொழி புணர்ந்து மாதாநுபங்கி எனவாயது வடநூன் முடிபு. மாதம் என்பது செருக்கு என்பது நிகண்டு. *(அமரகோசம்) அநு என்பது ஸாதத்யார்த்தத்தில வந்தது;* பங்கி; பங்கத்தையுடையான் என்றுஞ் செருக்கொழிதலுடையான் என்பது இப்பெயர்க்குப் பொருளாகக் கொள்க. பெரியராதலாற் பெருஞ்சிறப்பெய்திய ஞான்றும் தருக்கின்றியமைந்தொழுகுவார் என்பது

கருத்து. 'பணியுமாமென்றும் பெருமை' என்னுந் திருக்குறளினையும் நோக்குக.

இனி, மாதா, அநுபங்கி எனப்பிரித்து மாதாவை நிகராகக் கொண்டு, நடக்கின்ற ஒழுங்கினன் எனப்பொருள் கூறுவாரும் உளர். இப்பொருட்கு மாத்ரநுபங்கி என்னும் பெயர் மாதாநுபங்கி எனச் சிதைந்தது என்பது.

பெற்றவரு நாற்குருவும் பேணியொருபொருளை
யுற்றிருக்கா, லன்றி யுரைசெய்யார் பற்றி
யொருபொருளைப் பத்துப் பொருளாகச் செப்பித்
தருகையால் வள்ளுவரே தாய்

என முன்னை முதுவோரும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பெயர் வழக்கம்:

உப்பக்க நோக்கியுபகேசி தோன்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப-விப்பக்க
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற் கடற்கச்சு. என்னுந் திருவள்ளுவமாலையுட் கண்டது.

இச்செய்யுளில் 'உபகேசிதோண்மணந்தான்' என்றது கண்ணபிரானை, உபகேசம் – மயிராற்பின்னியபின், அதனாற் பெயர் சிறந்தார் பின்னைப்பிராட்டி. உபகேசத்தையுடையானை உபகேசி என்பது தமிழ்நூல் முடிபு. குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்றாற் போலக்கொள்க. இதனால் உபகேசியும், பின்னையும் ஒரு பொருட்பன்மொழியாதல் காண்க. இதனைமொழியாக்க மரபில் 'பாலேதிணையே' என்னும் வெண்பாவுரையில் இவ்வுப்பக்கநோக்கி, என்னுஞ் செய்யுளை எடுத்தோதி, 'இதனுள் உபகேசியார் நப்பின்னைப் பிராட்டியார் என நேமிநாதவிருத்திகாரர் கூறியவாற்றானும் நன்குணர்க. 'ஏர்ப்பின்னை தோண்முன்மணந்தவன்' என்றார் திருச்சிற்றம்பலக் கோவையினும்; 'பின்னை தோண்மணந்த பேராயா' என்றார். திருவாண்மொழியினும். உத்தரமாமதுரை, கண்ணபிரான் அவதரித்தருளிய வடமதுரை, 'வடமதுரைப் பிறந்தாய்' என்ப.

கண்ணன் கஞ்சனானேர்ந்த துயர்கெடுத்து அவ்வூரைத்தாங்கியமை புராணம் வல்லார் வாய்க் கேட்டுத் தெளிக.

உப்பக்கம் என்பது வடக்கண் என்றவாறு, நோக்கி என்னும் எச்சம், என்ப என்னும் வினைகொண்டு முடிந்தது. முன்னுந் திருமாலோடும் அக்கடவுள் செயலோடும் திருவள்ளுவரையும் அவர் செயலையும் உவமித்துக் கூறுதலானும் இதுவே இயைபுடைத்தாமாறு உணரப்படும்.

இக்கருத்தறியாதார், உபகேசியை உமாதேவியார் எனவும், உத்தரமாமதுரையை வடதிருவாலவாய் எனவும் உரைத்தார். அவர், 'கேசி- திருமால்; அது அக்கடவுள் சகக்கிரநாமத்திற் கண்டது; கேசிக்குப்பின்னே பிறந்தவள் உபகேசி என்றாயது உபேந்திரன் என்பது போல' என்றார். கேசி திருமாற்குப் பெயரன்மையும், அஃது அக்கடவுள் ஆயிர நாமத்தின்மையும் வல்லார் வாய்த்தேறுக. கேசவ; கேசிஉறா உறரி: என்புழிக் கேசிஉறா என்பது கேசி என்னும் அசுரனைக் கொன்றோன் என்னும் பொருட்டு. இதனை அந்நூலுரைகளிற் கண்டுகொள்க. கேசி திருமாற்குப் பெயரன்மையானே அதுபற்றி வந்தனயாவும் உரையன்மை காண்க. இச்செய்யுளுரை ஈண்டுத் தந்துரைக்கப்பட்டது.

செந்நாப்போதார்

சொல்லின்கட் கோடுதல் இல்லாமையினையுடைய நாவாகிய மலருடையார் என்றவாறு. 'சொற்கோட்டமில்லது செப்பம்' திருக்குறள். 116) என்பது பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டது. இவர்க்குச் சொற்கோட்டமின்மையாவது ஒருபாற் கோடாதமனத்தோடு எப்பாலவர்க்கும் ஒப்ப மெய்ந் நூல்களுள் அறம்பொருளின்பங்கள் கிடந்தவாறு எடுத்துரைத்தல் என்பது. 'எப்பாலவரு மியைபவே வள்ளுவனார், முப்பான் மொழிந்த மொழி' என்பதனானும், 'பகுத்துண்டு பல்லுயிரோம்புதல்' திருக்குறள். 322) என்பதன் உரையில் ஆசிரியர் பரிமேலழகர் 'எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு எனக் கூறியவாற்றானும் உணர்க. கோடுதலில்லாத சொல் எப்பாலவர்க்கும் இனிக்குந்தேனாதலால் அதன் பிறப்பிடமாகிய நாவினைப் போதாக்கி வழங்கினார். இவரை நான்முகனார் பிறப்பாகக் கோடலாற் கலைத்தெய்வம் இறைகொள்ளும் இயைபு பற்றி நாவினை மலரென்ப எனினும் அமையும்.

நாயனார்

இது தலைமையுடையார் என்னும் பொருட்டு. நாயன் - வடமொழிச் சிதைவு. ஆர். விகுதிபெற்று நின்றது. இவர்க்குத் தலைமை புலமையான் எய்தியதென்க. 'மன்புலவன் வள்ளுவன்' என்பதூஉம் இக்கருத்தே பற்றி வந்தது. 'கடைநிலத்தோ ராயினுங் கற்றறித் தோரைத், தலைநிலத்து வைக்கப்படும்' என்பது நாலடி.

நாயகன், நாயகியைத் தலைவன், தலைவி யென்று வழங்கலானும், இது தலைமையாற் போந்தபெயர் என்பது எளிதின் உணரற்பாற்று. இஃது, திருவள்ளுவநாயனார் என இயற்பெயரோடு புணர்த்து வழங்கப்படும். இவ்வழக்கம் நன்னூல் விருத்தி முதலியவற்றிற் காணலாம்.

பத்திராசிரியர்

திருமுகப் பாசுரம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

மழுவை மகாலிங்கையரவர்களும், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களும் வெளியிட்ட தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரை யச்சுப்பிரதிகளிற் சிறப்புப்பாயிரவுரைக்கண் இக்கருத்தானே வள்ளுவ நாயனாரும் முப்பாலாகக் கூறி' என்றவிடத்து, எமக்குக் கிடைத்த அந்நூற் பழைய ஏடுகள் பலவற்றினும் இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக்கூறி' என்பதேயுள்ளது.

திருக்குறளில் இரண்டு சொற்கள்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

திருக்குறளுக்கு நிகரான நூல் வேறேதும் இல்லை. உலகப் பொது மறை என்று அழைக்கப்படும் நூல் இஃது ஒன்றேயாம். இந்நூலில் காணப்படும் சொற்கள் அனைத்தும் தூயவை; இனியவை; அரியவை; நுட்பமானவை.

திருக்குறளில் காணப்படும் பல சொற்களுள் கட்டல் என்ற சொல் மிக நுட்பமானதாகும். கட்டு என்ற குற்றியலுகரச் சொல்லும் அல் என்ற விகுதியும் புணர்ந்து (உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் - நன்னூல் - 164) கட்டல் என்ற சொல் பிறக்கிறது. கட்டு அல் என்ற சொல்லுக்குப் பறித்தல் என்று பொருள். இச் சொல்லை இரண்டு குறட்பாக்களில் மட்டுமே திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். அவை,

கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்- குறள் - 550

ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு - குறள் - 1030 என இரண்டு குறட்பாக்களாம்.

இவ்விரண்டு குறட்பாக்களும் முறையே செங்கோன்மை, உழவு என்னும் வேறுபட்ட அதிகாரத்தினுள் இருப்பினும் களை பறித்தலையே மொழிவதை நோக்குக. பயிர் செய்வோர் களை பறித்தல் வேண்டும். கொலை செய்யும் கொடியவரை மன்னன் தண்டித்தல் வேண்டும். இப்படித் தண்டித்தல் ஒரு வகையில் களை பறித்தலேயாம்.

இவ்விரண்டு குறட்பாக்களைத் தவிர வேறெந்தக் குறட்பாவிலும் கட்டல் என்ற சொல் இல்லை.

திருக்குறளில் காணப்படும் பல சொற்களுள் கசடற என்ற சொல்லும்மிக நுட்பமானதே. கசடு என்ற குற்றியலுகரச் சொல்லும் அற

என்ற சொல்லும் புணர்ந்து (உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் - நன்னூல் -164) கசடற என்ற சொல் பிறக்கிறது. கசடற என்ற சொல்லுக்கு (கசடு-குற்றம், அற-நீங்க) குற்றம் நீங்க என்பது பொருள். இச் சொல்லை மூன்று குறட்பாக்களில் மட்டுமே திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். அவை,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. - குறள் - 391

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடற
சொற்றெரிதல் வல்லா ரகத்து. - குறள் -717

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயந் தரும் - குறள் - 845 என மூன்று குறட்பாக்களாம்.

இம் மூன்று குறட்பாக்களும் முறையே கல்வி, அவையறிதல், புல்லறிவாண்மை என்னும் வேறுபட்ட அதிகாரத்தினுள் இருப்பினும் கல்வியைச் சார்ந்து இருப்பதை நோக்குக கல்வி, கசடற அமையவேண்டும் என்பதே திருவள்ளுவரின் கருத்து என்பது இம் மூன்று குறட்பாக்களின் மூலம் மெய்ப்படுகிறது.

இம் மூன்று குறட்பாக்களைத் தவிர வேறெந்தக் குறட்பாவிலும் கசடற என்ற சொல் இல்லை.

களை என்பது குற்றத்தையும் பறித்தல் என்பது நீக்குதலையும் உணர்த்துவதால் களை பறித்தலும் குற்றம் நீக்குதலும் ஒரு பொருள் தருவன என்று கொள்ளலாம்.

சொற்கள் என்னும் கற்களைக் கொண்டு சிந்தனை என்னும் உளியால் திருவள்ளுவர் செதுக்கிய சிலைகள் அற்புதமானவை; அழகானவை; நுட்பமானவை.

செழுமை வாய்ந்த செம்மொழி

ஜெ. பிரதாபன்
தலைமைக் காவலர், மேலவளவு

செம்மொழியாம் செம்மொழி செழுமை வாய்ந்த செம்மொழி,
புள்ளிமானும் துள்ளிவர பள்ளி கொள்ளும் செம்மொழி,
ரத்தம் சிந்திக் காக்கும் மொழி ரதமாகப் போற்றும் மொழி,
சித்திரத்தில் சிறக்கும் மொழி சிங்காரச் செம்மொழி,
புத்திரமாய் காத்திடவே பரிவோடு நாமெல்லாம்,
உலகெல்லாம் பரவிவரும் உலகாய்ந்த செம்மொழி,
உயிராகப்போற்றும் மொழி உன்னதமான செம்மொழி,
பகுத்தறிவு பாசறையில் பவனி வரும் செம்மொழி,
உயிரெழுத்தில் எழுதுகிறேன் தமிழை உயிரெனவே போற்றுகிறேன்.

அம்மாவென்னும் தமிழ்வார்த்தை குழந்தை சொல்லும் முதல்வார்த்தை,
ஆலமரம் போன்று பரந்து விரிந்த மொழியாம் செம்மொழி,
இந்தியமொழியில் பழமை வாய்ந்த தமிழ்மொழியாம் செம்மொழி,
ஈட்டிய பொருளைக் காத்திடவே ஏற்றம் கொள்ளும் செம்மொழி,
உலகம் முழுதும் பரவிடவே உவகை கொள்வோம் நாமெல்லாம்,
ஊரெல்லாம் இம்மொழி ஊக்கம் கொள்ளும் செம்மொழி,
எடுத்த வேலைகள் எல்லாமே செம்மொழியைக் காத்திடவே,
ஏற்றம் கொள்ள தமிழ்மொழியை ஏங்கி வாழ்ந்தோம் அந்நாளில்,
ஐக்கிய நாட்டில் ஒலிக்கிறதே அச்சமில்லாத் தமிழ்மொழி,
ஒற்றுமை என்னும் நம்வார்த்தை உலகறிந்த தமிழ் வார்த்தை,
ஓடம் நம்மைக் காப்பதுபோல் காத்திடுவோம் செம்மொழியை,
ஔவை என்னும் தமிழ்ப்பாட்டி தமிழ்ப்பாடல் தந்த முதுமைப்பாட்டி,
ஃ என்னும் ஆயுத எழுத்து நம்மொழியைக் காக்கும் ஆயுதமே,

தமிழறிஞர் பேருரையில் குளிர்ந்த நீரோடையின் சப்தங்கள்,
இனஉணர்வு கொண்ட மொழி இலக்கணங்கள், இலக்கியங்கள் கண்டமொழி.
அதனாலே செம்மொழி நாட்டில் நல்ல மொழியாமே,
நம்மொழியைக் காப்பதுவே நாம் கொண்ட முதல் கடமை,
பரிணாம வளர்ச்சியில் பலம்கொண்ட செம்மொழி,
சிந்தித்து செயல்படுவோம், செம்மொழியைக்காக்க சிறந்த பணி ஆற்றிடுவோம்,
அந்தச்செம்மொழியைக் காத்திடுவோம், நாமெல்லாம் பாங்குடனே,
உயரத்தூக்கிப்பிடித்திடுவோம், செம்மொழிக்கொடியை நாட்டிடுவோம்,
நாட்டிடுவோம்! நாட்டிடுவோம்! தரணிதனில் செம்மொழியை நாட்டிடுவோம்!!

திருவள்ளுவர் கொள்ளும் நட்பு

திருமதி. இராசம் மரகதம்
மதுரை - 3

நான் உங்களுடன் ஒரு கருத்தினைத் தெளிவோடு பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன். நம் மனத்திற்குள்ளேயே பதிந்து, புதைந்து கிடக்கும் இரகசியங்களை யாரிடம் சொல்வோம்? பெற்றோரிடமா? சகோதர, சகோதரிகளிடமா? உற்றார் உறவினரிடமா? அண்டை அயலாரிடமா? மனைவி-கணவனிடமா? கணவன்-மனைவியிடமா? குழந்தைகளிடமா? ஆசிரியர்களிடமா? இவ்விதம் அடுக்கிக் கொண்டே போனால் - இல்லை - இல்லை - இல்லை - இல்லை என்பதுதான் விடையாக இருக்கும்! சரியா?

அங்ஙனமாயின் யாரிடம் சொல்வோம்! நமது முழு நம்பிக்கைக்கும் உரியவர் யார்? ஐயமே இல்லை! நமது நண்பர்களிடம் தான்! எனவே தான் அன்புடைமை, பண்புடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை ஆகியவற்றுக்கெல்லாம் ஒரே ஓர் அதிகாரம் மட்டுமே வகுத்துத்தந்த வள்ளுவப் பெருந்தகை நட்புக்கு மட்டும் நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, நட்பாராய்தல், சிற்றினஞ்சேராமை, பெரியாரைத் துணைக் கோடல், பழைமை என ஏழு அதிகாரங்களை எழுதி நட்புக்கு ஏற்றம் தந்துள்ளான்.

'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல' உள்ளவர்கள் நண்பர்கள் ஆக முடியுமா? ஓர் எடுத்துக்காட்டு பார்க்கலாம்.

பாண்டிநாட்டுப் புலவர் பெருமகன் பிசிராந்தையாரும் சோழநாட்டுக் கோமகன் கோப்பெருஞ்சோழனும் ஒருவரையொருவர் பார்க்காமலேயே, ஒருவரைப்பற்றி மற்றொருவர் கேள்விப்பட்ட அளவிலேயே நட்புக்கொண்டதிறம் இன்று வரை அனைவரும் பாராட்ட வேண்டிய, பின்பற்ற வேண்டியதல்லவா?

"தென்னம் பொருப்பின் நன்னாட்டுள்ளும் பிசிரோன் என்ப என்னுயிர் ஓம்புகனே" என்று கூறிய கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரிடம் அவரைக் காணாமலே அவர்பால் பேரன்பு கொண்டு பெருநட்புடையவனாய்த் திகழ்ந்தான். பாண்டிநாட்டில் வாழ்ந்த போதும் பிசிராந்தையார் சோழனையே தம் அரசனாகக் கருதி வாழ்ந்தவர்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்".

என்ற குறட்பாவுக்கு உயிரூட்டியவர்கள் இருவரும்!

கோப்பெருஞ்சோழன் தனது மாண்பில்லாத மக்களால் அரசு துறந்து, உயிரையும் துறக்க எண்ணி உறையூரின் ஒருபால் சென்று வடக்கிருந்தான். தன்னருகே ஓரிடத்தை விட்டு வைக்குமாறு தன்னுடன் சூழ்ந்திருந்தவர்களிடம் கூறினான். என்னுயிர் நண்பர் பிசிராந்தையார் இப்போது இங்கே வருவார் அவருக்குத்தான் 'இந்த இடம்' என்று விளக்கமும் சொல்லி வைத்தான். சோழ மன்னன் வடக்கிருப்பது ஆந்தையாருக்குத் தெரியாது! எனினும் அவர் வருவார் என்று மன்னன் உள்ளத்திற்கு - உணர்வுக்குத் தெரிந்திருந்தது! இங்கே பாண்டிநாட்டிலே புலவர்பெருமான் ஆந்தையார் உள்ளம் பரபரப்புக்குள்ளாயிற்று! அவரது உள்ளத்திற்கு - உணர்வு தூது வந்தது! என் ஆருயிர் நண்பன் சோழமன்னன் வடக்கிருக்கிறான் – நானும் அங்கே செல்ல வேண்டும். உடன் வடக்கிருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டே பாண்டிநாட்டை விட்டு நீங்கினார். சோணாடு நோக்கிப் புறப்பட்டார். நடந்து, நடந்து வந்து சேர்ந்தார். மன்னன் அருகே சென்று வடக்கு நோக்கி அமர்ந்தார், சுற்றியிருந்த அனைவரும் வியப்புக்கடலில் மூழ்கினர்! மன்னன் உயிர்விட்ட போது 'தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடுவது போல' புலவரும் உடன் உயிர்நீத்தார்! உண்மை நட்புக்கு முத்திரை பதித்தார்!

"எனக்கு உண்மை நண்பர்கள் இல்லவே இல்லை; என் நண்பர்கள் உண்மையாக இல்லை", "உள்ளம் ஒத்த, உணர்ச்சி ஒத்த நண்பர்களாக இல்லை" என்று சொன்னான் கிரேக்கத்துப் பேரறிஞன் சாக்ரடீஸ்! அவனைப் பார்க்கவும், உரையாடவும் ஒவ்வொரு நாளும் நண்பர்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருப்பார்களாம்! அந்தப் பேரறிஞன் தன் நாற்காலிக்கு அருகிலேயே இன்னொரு நாற்காலியைப் போட்டு வைத்திருப்பானாம். அது எதற்கு! என்று யாருக்குமே தெரியவில்லை. இறுதிவரை தெரியவே இல்லையாம்! ஏனெனில் அந்த நாற்காலியில் யாருமே அமர்ந்ததேயில்லையாம்! கடைசியாக சாக்ரடீஸிடமே கேட்டுவிட்டார்களாம்!

"இந்த நாற்காலியை எனது உண்மையான நண்பனுக்காகத் தான் போட்டு வைத்திருக்கிறேன், இது வரை இதில் உட்கார யாருமே வரவில்லை" என்பது சாக்ரடீஸ் தந்த பதில்! பதில் கேட்டவர்கள் முகமெல்லாம் இருண்டன!

கோப்பெருஞ்சோழன் ஒதுக்கிவைத்த இடத்திற்குப் பிசிராந்தையார் வந்து அமர்ந்தது போல - சாக்ரடீஸ் போட்டு வைத்திருந்த நாற்காலியில் அமர இறுதிவரை யாருமே வரவில்லையாம்! எப்படி?

நமக்கு நம் நண்பர்கள் எப்படி?

நற்றிணையில் சில நல்லவை

த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்பில்
முனைவர் பட்ட ஆய்வாளர்

பழந்தமிழர்களின் வாழ்க்கைமுறையை அறிவதற்குப் பெருந்துணைபுரிவன சங்க நூல்களாகும். எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை முதலாவதாக வைத்துப் போற்றப்படும் சிறப்புடையது. அகன் ஐந்திணைக்குரிய நல்ல பாடல்களின் தொகை என்பது இதன்பொருள். இதில் கடவுள் வாழ்த்து உட்பட 401 பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்துப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனால் இயற்றப்பட்டது. பிற பாடல்களை இயற்றியோர் எண்ணிக்கை 176 ஆகும்; இதனை வேறு விதமாகக் கணிப்பவர்களும் உண்டு. முற்றிலும் கிடைக்கவில்லை. நற்றிணைப் பாடல்கள் யாவையும் அகப்பொருட் பாடல்களே. இந்நூற்பாடல்கள் ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப் பேரெல்லையும் கொண்டவை. (ஆயினும் 120, 379 ஆகிய இருபாடல்களும் 13 அடிகள் கொண்டவை). 400 பாடல்களைக் கொண்டதனால் நற்றிணை நானூறு எனவும் அழைக்கப்பெறும். அகப்பொருள் செய்திகளை இந்நூல் கொண்டிருந்தாலும் கிள்ளி, குட்டுவன், செழியன், சென்னி முதலான பெருவேந்தர்களையும் ஆஅய், ஓரி, காரி போன்ற கொடை வள்ளல்களையும் பற்றிய பல செய்திகளைத் தாங்கியுள்ளது.

அன்னி, மிஞிலி, குழிசி, புல்லி, பழையன், தித்தன், நன்னன் போன்ற குறுநில மன்னர்களையும் தழும்பன், திருமாவுண்ணி, விரா அன், வீரை போன்ற மறவர்களைப் பற்றியும் பல்வேறு வரலாற்றுத் தகவல்களைக் கொண்டுள்ளது. நற்றிணையின் 234 ஆம் பாடல் முழுவதும் கிடைக்கவில்லை. 385ஆம் பாடலின் பிற்பகுதி கிடைக்கப்பெறவில்லை. இந்நூலின் 56 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. ஏனைய பாடல்களைப் பாடிய புலவர்களின்

எண்ணிக்கை 192 என்பர். நற்றிணைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் வரைந்த உரை அறிஞர்களால் போற்றப்படுகிறது.

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் திருமால் பற்றிய பாடல் நற்றிணையின் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைந்திருக்கின்றது. அகப்பொருட் பகுப்புக்களில் ஒன்றான 'திணை'யையும் (ஒழுக்கம்) 'நல்' என்னும் அடைமொழியையும் பெற்று 'நல்லொழுக்கம்' எனப் பொருள்படும் வகையில் இந்நூலின் பெயர் 'நற்றிணை' என அமைந்திருக்கின்றது. இந்நூலில் உள்ள 399 பாடல்களையும் 175 புலவர்கள் பாடியிருக்கின்றனர். இவர்களில் தனிமகனார், மலையனார், தும்பிசேர் கீரனார், மடல்பாடிய மாதங்கீரனார், வண்ணப்புறக்கந்தரத்தனார், தேய்புரிப் பழங்கயிற்றனார், விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் ஆகியோர் பாடல் வரிகளால் பெயர் பெற்ற புலவர்கள் ஆவர். நற்றிணையில் குறிஞ்சித் திணையில் 130 பாடல்களும், பாலைத்திணையில் 105 பாடல்களும், நெய்தல் திணையில் 102 பாடல்களும், மருதத்திணையில் 32 பாடல்களும், முல்லைத்திணையில் 30 பாடல்களும் அமைந்திருக்கின்றன. குறுந்தொகை, அகநானூற்றுப் பாடல்களைப் போன்று இந்நூலில் உள்ள பாடல்களும் உரிப்பொருள் கட்டமைப்பில் சிறப்புப் பெறுகின்றன. திணை, துறைப் பகுப்புக்கள் பொருத்தமாகவும், செறிவாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளுறை, இறைச்சி, உவமை நயங்கள் சான்ற பாடல்கள் நற்றிணையில் மிகுதியாகக் காணப்படுகின்றன. உயிரோட்டமான சொல்லாட்சிகளையும் தொடராட்சிகளையும் நற்றிணைப் புலவர்கள் கையாண்டிருப்பதால், மொழிநடை ஆளுமையிலும் நற்றிணைப் பாடல்கள் தனியிடத்தைப் பெறுகின்றன. மெய்ப்பாடுகள், நற்றிணைப் பாடல்களில் பரவலாகப் பயின்று வந்திருக்கின்றன.

அகச்சுவை கெழுமிய நற்றிணைப் பாடல்களில் மக்களின் அறவாழ்க்கை மாண்பு, மன்னர்களின் கொடைத்திறம், ஆட்சித்திறம், ஒருமைப்பாட்டுணர்ச்சி ஆகியன குறித்த குறிப்புக்கள், பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்வியல் பண்பாட்டுச் சிந்தனைகள்

ஆகியனவற்றையும் செறிவாகக் காணமுடிகின்றது. நல்வினையின் இம்மைப்பயன் (நற் 210), புன்னை மரம் முதலான ஓரறிவு உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி உறவு கொள்ளும் நுட்பம் (நற் 172), காதலியின் மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கை (நற் 397), கற்புடைய பெண்கள், புக்ககம் எவ்வளவு வறுமையுற்று வாடியபோதும் ஏற்றமுடைய வளமிக்க தம்பிறப்பகத்தை நினைத்துப் பார்க்காமல் இல்லறம் நடத்திய பண்பாட்டுச் சிறப்பு (நற்11), இரவில் விருந்துவரினும் மனமுவந்து விருந்தோம்பும் பண்பாடு (நற் 142) முதலான அரிய அறச்சிந்தனைகளும், இல்லற வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனைகளும், தமிழர்தம் விழுமிய பண்பட்ட பண்பாட்டு வாழ்வியல் சிந்தனைகளும் நற்றிணைப் பாடல்களில் பரவலாகப் பயின்று வந்திருக்கின்றன.

புரைய மன்ற, புரையோர் கேண்மை (நற் 1:5) என நட்பின் சிறப்பை நற்றிணைப் பாடல் புலப்படுத்துகின்றது.

தமிழர்களின் உயரிய பண்பாட்டு விழுமியத்தைச் சுட்ட வந்த திருவள்ளுவர்,

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

என்றார். வள்ளுவர் வழிப்பட்ட இத்தகைய உயரிய பண்பாட்டுச் சிந்தனையை,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் (நற். 355)

என்னும் நற்றிணைப் பாடலடிகள் வெளிப்படுத்துவது சிந்திக்கத் தக்கதாகும். பிற்காலத்தில் தோன்றிய தூது இலக்கியங்களுக்குரிய தோற்றுவாயும் நற்றிணையில் காணப்படுகின்றது. குருகு, நாரை, கிளி போன்ற பறவையினங்களைத் தூதுவிடும் மரபினையும் நற்றிணைப் பாடல்களில் காணுகின்றோம்.

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 March 2010

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

இரா. அழகுமலை	முனைவர் க. சின்னப்பா	இரா. குருசாமி
செயலாளர்	முதல்வர்	செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்	செந்தமிழ்க் கல்லூரி	செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,	From
செயலாளர் மதுரைத் தமிழ்ச் சங்கம் மதுரை – 625 001	**SECRETARY** Madurai Tamilsangam Madurai - 625 001 TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.